**தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 I (ஈ) உப பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குவதாகுகவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலமை தொடர்பான கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் 04 நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 1,204,125,232 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத் தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றில் அவை சீர் செய்யப்பட்டு சரியான பெறுமதி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| **(ஆ)** | மாவட்ட செயலகத்தின் 2,625 சதுர அடியை கொண்ட காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | அரச மதிப்பீட்டு திணைக்களத்திடம் அரச சொத்துகளிற்கான மதிப்பீட்டு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளது எனினும், மதிப்பீட்டு அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. விரைவில் மதிப்பீட்டறிக்கையைப் பெற்று கணக்குகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 2 மீண்டுவரும் மற்றும் 5 மூலதன செலவின விடயங்களுக்கு திட்டமிடப்பட்டதன் பிரகாரம் திறைசேரியினால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் ரூபா 111,242,752 தொகை நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தவதற்கு முடியாமல் போனமை அவதானிக்கப்பட்டிருந்தது. | எம்மால் கட்டுநிதி கோரிக்கைகள் உரிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட போதும் பொதுத் திறைசேரியினால் போதிய கட்டுநிதி விடுவிக்கப்படாததன் காரணமாக நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ஏற்பட்டது. | உரிய காலத்தில் ஒதுக்கீட்டினை பெற்று கட்டு நிதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் 23 எண்ணிக்கையான செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பில் ரூபா 167,414,638 ஆனது ஏழு சதவீதம் தொடக்கம் நூறு சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது. | செலவு மேற்கொள்வதில் சிக்கனத்தன்மை பேணப்பட்டமையுடன் பொருட்கள் வழங்கல்களில் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டமையினாலும் அவற்றை பெறுவதில் ஏற்பட்ட தடைகள் காரணமாகவும் போக்குவரத்து தடைகள் ஏற்பட்டமை காரணமாகவும் பெருமளவான வேலைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டமையால் குறித்த சேமிப்பு ஏற்பட்டது. | சரியான முறையில் கணக்கீடு செய்து பாதீட்டினை வினைத்திறனாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தில் வகை மாற்றத்தின் மூலம் 04 செலவின விடயங்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா 19,590,000 வேறு செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது எனினும் இவ் செலவின விடயங்களின் மொத்த தேறிய ஒதுக்கிட்டில் கூட்டுமொத்தம் ரூபா 7,380,273 ஆனது 02 சதவீதம் தொடக்கம் 14 சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது. இது குறித்த வகைமாற்றமானது தேவைகேற்ற அளவில் வினைத்திறனாக மேற்கொள்ளப்படாமையை எடுத்துக் காட்டுகிறது. | நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் நிதி பற்றாக்குறை காரணமாக நாளுக்கு நாள் பொருட்கள் வழங்கல்களில் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டமையினாலும் அவற்றை பெறுவதில் ஏற்பட்ட தடைகள் காரணமாகவும் போக்குவரத்து தடைகள் ஏற்பட்டமை காரணமாகவும், பெருமளவான வேலைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. | குறைநிரப்பு பிரேரணையானது உண்மையான தேவையின் அடிப்படையில் சமர்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |

### 2.3 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்கலால் 88 செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 10 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 40,270,395 சேமிக்கப்பட்டிருந்தது. | செலவுகள் மேற்கொள்வதில் சிக்கனத்தன்மை பேணப்பட்டமை. குறித்த சில அமைச்சுக்களில் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிற்கான முற்று முழுதான செலவினம் ஏற்பட்டிருக்காமை. கோரப்பட்ட கட்டுநிதி முழுமையாக திறைசேரியினால் வழங்கப்படாமை போன்ற காரணங்களினால் குறித்த சேமிப்பு ஏற்பட்டுள்ளது. | ஒதுக்கீட்டினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | மீளாய்வாண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களால் 13 செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் முற்றுமுழுதாக பயன்படுத்தப்படாமல் கூட்டுமொத்தம் ரூபா 977,265 சேமிக்கப்பட்டிருந்தது. | சில அமைச்சுக்களில் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகள் ஆண்டு இறுதியில் கிடைக்கப்பெற்றமையினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிற்கான முழுதான செலவினம் ஏற்பட்டிருக்காமை. | - மேற்படி - |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முசலி சமுர்த்தி வங்கியின் காசாளர் வங்கிக் கருமபீடத்தில் பயனாளிகளின் நேரடி பிரசன்னம் மற்றும் ஆள் அடையாளம் என்பவற்றினை உறுதிப்படுத்தாமல் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 139 இற்கு முரணான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 3,392,000 வழங்கியது. இந்த தொகையை குறித்த உத்தியோகத்தர் தவறாக பயன்படுத்தி இழப்பாக அடையாளம் காணப்பட்டது. இதில் ரூபா 2,650,000 அறவிடப் பட்டிருப்பினும், மீதமுள்ள ரூபா 942,000 இதுவரை அறவிடப்படவில்லை. | முசலி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பூரண விளக்கத்தினை குறித்த வங்கியிடமிருந்து பெற்று விரைவில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் உரிய பயனாளியின் ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுவதுடன் மீதமுள்ள நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.5 முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவி இடைநிறுத்தப்பட்ட பதவி வெறிதாக்கப்பட்ட மற்றும் இளைப்பாறிய 04 அலுவலர்களது பதவியினர்கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 520,841 இனை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 04 இன் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 04 இன் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.6 வைப்பு கணக்கு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 4,001,588 பெறுமதியான 119 வைப்புக்கள் நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பொது வைப்புக் | மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த பிடிபண வைப்புகளை மீளப்பெறுவதற்கு உரியவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டும் பெறப்படாத | நிதி ஒழுங்கு விதி 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | பிடிபணம் அரசிறையாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) இரண்டு வைப்புக் கணக்கின் தலைப்பின் கீழ் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4,125,661 பெறுமதியான 66 வைப்புக்கள் 03 தொடக்கம் 40 மாதங்களாக பயன்பாடின்றி பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். |

## 2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில், மொத்தம் ரூபா 1,889,938 பெறுமதியான 49 காசோலைகள் 7 வருடங்களாக இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக காணப்பட்டிருந்தும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இம் மோசடி தொடர்பான நியமிக்கப்பட்ட விசேட குழுவின் முடிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்கு விதி 104 -110 இன் பிரகாரம் நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பினது (ILO) நிதியில், மத்திய அரசின் விவசாயத் திணைக்களத்தின் ரூபா 17.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் விவசாய அமைப்புகளிற்கு இயந்திரங்களும் பயனாளிகளிற்கு நிலக்கடலை விதைகளும் வழங்கப்பட்டிருந்தன. தெரிவுச் செவ்வை அடிப்படையில் களப்பரீட்சிப்புக்களை மேற்கொண்டு ஆய்வு செய்தபோது பல பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட நிலக்கடலை விதைகளின் முளைதிறன் 25% தொடக்கம் 50% வரை மாத்திரமே இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் பயனாளிகள் வெளிச்சந்தையில் நிலக்கடலையினை கொள்வனவு செய்து மீள் பயிரிட்டிருந்ததுடன் கணிசமான பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் பூரண பயன்பாட்டை பெறமுடியாமல் போயுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | குறித்த கிராமிய மட்ட சமூக அமைப்பினால் நிலக்கடலை சுத்திகரிக்கப்பட்டும் முளைதிறன் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்படுவதனை உறுதிபடுத்தி யுள்ளமையுடன் பயனாளிகளாலும் 85% முளைதிறன் உறுதிப்படுத்தப்பட்டது. | விதைநிலக்கடலை கொள்வனவு செய்யும் போது அதன் முளைதிறன் பரீட்சிக்கப்பட்ட பின்னரே கொள்வனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும |
| (ஆ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் ரூபா 6,321,438 செலவில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் மற்றும் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் சரியான சாத்திய வள ஆய்வு | பதில் தரப்படவில்லை. | ஏதிர்காலத்தில் இவ்வாறான நிர்மாணங்களுக்கு சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சமுர்த்தி ஆரோக்கிய உணவகத்தை |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டு இக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடையப்பெற்றிருக்கவில்லை. | | வினைத்திறனாக இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(இ)** கமத்தொழில் அமைச்சின் ரூபா 9.9 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட ஆடுகள் வளர்ப்புத் திட்டம் தொடர்பாக 120 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 360 பெண் ஆடுகளில் 2024 மே 06 ஆந் திகதிவரை வழங்கப்பட்ட 20 ஆடுகள் 14 நாட்களுக்குள் நோய்காரணமாக இறந்துள்ளமை களப் பரீட்சிப்பின்போது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குனரால் இறந்த ஆடுகளுக்குப் பதிலாக புதிய ஆடுகள் நாளதுவரை வழங்கப் பட்டிருக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட நலனை பெறமுடியாமல் இருந்தது. | வழங்குனருக்கு எதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இறந்த ஆடுகளுக்குப் பதிலாக புதிய ஆடுகள் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ)** மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 09 சமுர்த்தி வங்கியினுாடாக சமுர்த்தி நிவாரண உதவி பெறும் 622 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான மாதாந்த கடன்தவணைக் கட்டணமானது 03 தொடக்கம் 30 மாதங்கள் வரையான காலப்பகுதி வரை அறவிடப்படாத நிலுவையாக கூட்டுமொத்தம் ரூபா 25,160,211 காணப்படுவதுடன் அந்நிலுவைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகள் தொடர்பில் பயனாளிகளிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் அறவீடு செய்ய முடியாத பயனாளிகளுக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | வழங்கப்பட்ட கடன்களை உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** மன்னார் மாவட்டத்தின் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள சமுர்த்தி வங்கிகளின் வங்கிக்கணக்குகளை பரிசீலித்ததன் அடிப்படையில் பயனாளிகளுக்கான மாதாந்த சமுர்த்தி கொடுப்பனவு பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் தொடர்ச்சியாக வைப்பிடப்பட்ட போதிலும் 223 பயனாளிகளினால் மொத்தமாக ரூபா 17,739,811 தொகை 10 தொடக்கம் 48 மாதங்களுக்கு மேலாக மீளப்பெறாது உரிய தேவைக்கு பயன்படுத்தப்படாது இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தகுதியற்ற பயனாளிகள் தெரிவு | தற்போது இவைகள் உறுதிப்படுத்தப்பட்டு பொருத்தமானவர்களுக்கு வழங்கவும் ஏனையவர்களுக்கு நிறுத்தப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சமுர்த்தி பயனாளிகளை நேர்மையாக தெரிவு செய்து முறையான ஆய்வு மேற்கொண்டு தேவையற்றவர்களை நீக்கி உதவிக் கொடுப்பனவை வறிய மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செய்யப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுவதுடன் காத்திருப்போர் பட்டியலில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் சமுர்த்தி உதவி கிடைக்காது பாதிக்கப்பட்டுள்ளனர்.

**4. மனிதவளமுகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி 667 ஆக காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதியில் 177 ஆளணி வெற்றிடங்களாகவும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 69 மேலதிக ஆளணியினராகவும் காணப்படுகின்றனர். | அரசினால் நாடளாவிய ரீதியில் நடை முறைப்படுத்தப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் 69 மிகை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கோரிக்கைக்கமைய எம்மால் புதிய பதவிகள் உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மேலதிக அளணியினர் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |